# மத்திய நுவரகம் பலாத பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 11 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 30 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் போது காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 21,570,000 இனால் அதிகரிக்கும் விதமாக மற்றும் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் பெறுமதி ரூபா 525,000 இனால் குறைவடையும் விதத்திலும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் அதற்கான தகுதியான திறந்தொழில் தகைமையுடைய ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ளாமல் சபையின் தொழில்நுட்ப அலுவலரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 400,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த இரண்டு சில்லு கை டிரக்டரின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் ரூபா 225,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தினால் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யும் போது ரூபா 1,240,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தை கணித்து கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 122,086 இற்கான முன்னைய ஆண்டுகளுக்கான செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

கூட்டுத்தொகை ரூபா 107,878,674 இற்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்/ நிலையான சொத்துக்கள் பதிவேடு/ உளமைமைய உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது செயற்பாட்டு மிகை ரூபா 2,719,342 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 3,602,120 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வீத வரி

-------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134(i) இன் பிரகாரம் முன்னேற்றப்பட்ட பகுதிகள் என வெளியிடப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வருடாந்தப் பெறுமதி மீது வீத வரி விதிக்கப்பட்டு அறவீடு செய்வதற்காக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

2.2.2 கடை வாடகை

-----------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(i) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 219,949 இற்கான நிலுவை கடை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 வருடங்களை மிகைத்த பழைய அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் ரூபா 174,182 இனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அதிகாரம் 203 மோட்டார் வாகன சட்டம், பிரிவு 2(1) இன் பிரகாரம் வாகனங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும் 06 வாகனங்கள் பதிவு செய்யப்படாமல் ஓட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

-----------------------------------------------------------

சபைக்கு சொந்தமான 03 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் 02 வருடத்தை மிகைத்த காலம் பயன்பாடற்று காணப்பட்டது.

3.3 ஒப்பந்த நிருவாகம்

---------------------------------

நிதி ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்ட 2011 யூலை 26 திகதிய இலக்கம் FC/3/3/13 சுற்று நிருபத்தின் மற்றும் 2011 செப்டம்பர் 27 திகதிய இலக்கம் 452 கொண்ட அரச நிதி சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக 05 சந்தர்ப்பங்களில் பதிவு செய்துள்ள சங்கங்களுக்கு நேரடியாக ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு